Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.666/2019

**Depositions of PW- 8**

| Name | திரு.ரமேஷ் | Occupation | காவல் ஆய்வாளர் |
|---|---|---|---|
| Father's name | பால்ச்சாமி | Calling | |
| Village | கல்லல் | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of February 2026.

20.02.2026

1 முதல் 3 எதிரிகள் ஆஜர் .

**சாட்சி காணொளி காட்சி மூலம் ஆஜரானார்.**

**முதல் விசாரணை**

நான் தற்போது சிவகங்கை மாவட்டம் கல்லல் காவல்நிலையததில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.05.2019ம் தேதி காலை 08.30 மணிக்கு மம்சாபுரம் காவல்நிலைய தலைமை காவலர் 1572 பாண்டியராஜ் என்பவர் திருவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையிலில் சிகிச்சையிலிருந்த பாலையாபிள்ளை என்பவரிடமிருந்து புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண்.83/2019 பிரிவுகள்.294(b), 323, 506(1)இதச ஆக வழக்கு பதிவு செய்துள்ளார். பின்னர் மேற்படி வழக்கு கோப்பை எனது பார்வைக்கு வைத்தார். இவ்வழக்கை எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 27.05.2019 அன்று காலை 08.45 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் பொன்முருகன், ஆறுமுகம் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். **வரைபடம் அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

பின்னர் சாட்சிகள் பாலையாபிள்ளை, சீதாலட்சுமி, ராமலட்சுமி, பொன்முருகன், ஆறுமுகம், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமை காவலர் பாண்டியராஜ் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர்

இவ்வழக்கின் 1வது எதிரியான ரவி என்பவரை மம்சாபுரம் டு இடையன்குளம் ரோட்டிலுள்ள அய்யப்பன் கோவில் முன்பு வைத்து 11.30 மணிக்கு கைது செய்து நிலையம் கொண்டு வந்து தக்க ஆவணங்களை தயார்செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட பாலையாபிள்ளை என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் மகேஸ்வரி என்பவரை விசாரித்து அசா.1ன் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததில் வாதிக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கியதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை. 294(b), 323, 506(1) இதச விலிருந்து பிரிவுகள்.294(b), 325, 506(1) இதச ஆக சட்டப்பிரிவு மாற்றம் செய்து இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள்.294(b), 325, 506(1) இதச வின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன். **சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அசாஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**

இவ்வழக்கின் சாட்சி ராமலட்சுமியின் கணவரை விசாரணை செய்தேனா என்றால் விசாரிக்கவில்லை. மேற்படி நபரை விசாரித்தால் கணவன் மனைவிக்குள் பிரச்சனை ஏற்பட்டதாக தெரியவரும் என்றாலும் அது வழக்கிற்கு விரோதமாக இருக்கும் என்பதால் அவரை நான் விசாரணை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. இவ்வழக்கின் அசா.1 முதல் 5 வரையிலான சாட்சிகள் அனைவரும் அசா.1ன் உறவினர்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. நான் விசாரணை செய்த மேற்படி சாட்சிகள் அனைவரும் அசா.1 தனது உறவினர் என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சாட்சிகள் விசாரணையின்போது அசா.1 தனது உறவினர் என்று சாட்சிகள் குறிப்பிடவில்லை ஆனால் தனது பக்கத்து வீட்டில் வசித்து வருபவர் என்று சாட்சிகள் கூறியுள்ளனர். அசா.1ன் வீட்டை சுற்றியுள்ள செல்வம், ராக்கப்பன், முத்து, சுந்தரமகாலிங்கம் ஆகியோர்களை இவ்வழக்கின் சாட்சிகளாக விசாரிககவில்லை என்றால் சரிதான்.

இவ்வழக்கில் சாட்சியாக விசாரிககப்பட் மருத்துவர் மகேஸ்வரி கொடுத்த விபத்து பதிவேட்டில் ஆர்த்தோ ஒபீனியன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மருத்துவரை விசாரணை செய்தபோது மேற்படி ஆர்த்தோ மருத்துவரை பற்றி எந்த விசாரணையும் செய்யவில்லை என்றால் பொதுவாக விபத்து பதிவேடு தயார்செய்யும்

மருத்துவரிடம் தான் விசாரணை செய்வோம். நான் விசாரணை செய்த மேற்படி மருத்துவரும் ஆர்த்தோ மருத்துவர் கொடுத்த கருத்துரையின் அடிப்படையில் தான் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அவர் கொடுத்த காயச்சான்றின் அடிப்படையில் தான் இவ்வழக்கின் பிரிவுகள் மாற்றப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நான் மருத்துவரை விசாரணை செய்தபோது இவ்வழக்கின் அசா.1 க்கு வழங்கப்பட்ட டிஸ்சார்ஜ் சம்மரியை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆர்த்தோ மருத்துவரை விசாரணை செய்தால்தான் அசா.1 க்கு ஏற்பட்ட காயமானது அவர்தவறுதலாக கீழே விழுந்ததால் ஏற்பட்ட காயமா என்பது தெரியவரும் என்றால் சரியல்ல. நான் மேற்படி கூறியவாறு சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் 1 வது எதிரியை கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் அக்கறை சாட்சிகளை மட்டும் விசாரணை செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கை முறையாக விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அசா.1 க்கு ஏற்பட்ட காயத்திற்கும் எதிரிகளுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.